வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

அரசு தரப்பு சாட்சி 6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தில்குமார் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : /2023 |

(எதிரிகள் முன்னிலையானார்கள்)

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரம்மாணம் செய்யப்பட்டார். 1973ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

நாள் 18.08.2023.

முதல் விசாரணை

நான் வடுகபட்டியில் குடியிக்கிறேன். அயனிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் முதல் எதிரியை மட்டும் தெரியும். எங்கள் தெருவில் குடியிருக்கிறார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து, குறுக்கு விசாரணை செய்ய கூடுதல் அரசு குற்ற வழக்கறிஞர் அனுமதி கோரினார், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

ஆஜர் முதல் எதிரியின் அம்மா பெயர் கருப்பாயி, அப்பா பெயர் முருகன். கருப்பாயி–முருகனுக்கு ஐந்து பெண் குழந்தைகள், ஒரு மகன். நான் போலீஸ்

விசாரணையின்போது, ஆஜர் முதல் எதிரியின் உடன்பிறந்தவர்கள் ஐந்து பேர் எனவும், அவர்களில் ஆஜர் 1ம் எதிரிக்கும், அவரது தம்பிக்கும் திருமணமாகவில்லை என்றும், ஆஜர் 1ம் எதிரி அவரது தாய்மாமன் மகன் வீருவீடை சேர்ந்த ஆனந்தராஜ் என்பவரை காதலித்ததாகவும், ஆனால் ஆனந்தராஜ், அவரது அக்கா மகள் லட்சுமியை திருமணம் செய்ய ஏற்பாடு செய்திருந்ததாகவும், அதை தெரிந்து கொண்ட விஜயசாந்தி தனது வீட்டில் கட்டையால் தன்னைத் தானே அடித்துக் கொண்டு தற்கொலைக்கு முயன்றதாகவும், முன்னதாக ஆஜர் 1ம் எதிரி விஜயசாந்தி ஆனந்தராஜூடன் பைக்கில் போவதும், வருவதுமாகவும் இருந்தார் என்றும், அவரைத்தான் அவர் திருமணம் செய்து கொள்ளப் போவதாக கேள்விப்பட்டேன் என போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளும், நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு அனுசரணையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்) P.கணேசன்
18.8.23
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

அரசு தரப்பு சாட்சி 7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விமல் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : /2023 |

(எதிரிகள் முன்னிலையானார்கள்)

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரம்மாணம் செய்யப்பட்டார். 1973 ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 18.08.2023.

முதல் விசாரணை

நான் வைகை அணையில் குடியிருக்கிறேன். சுகர் பேக்டரியில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. எங்களுக்கு ஒத்த வீடு மேல்மங்கலம் ரோட்டில் தோட்டம் இருந்தது. சுமார் 1.1/2, 2 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் தோட்டத்திற்கு எதிர்புறம் உள்ள தோட்டத்தில் ஒரு ஆண் இறந்து கிடந்ததாக தகவல் தெரிந்து கொண்டேன். நானும், எனது தாத்தாவும் தினந்தோறும் மாலை நேரங்களில் எங்கள் தோட்டத்துக்கு செல்வது வழக்கம். பிரேதம் இருப்பதாக கேள்விப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக இரவு 8 மணியளவில் நானும், என் தாத்தாவும் தோட்டத்தில் இருந்தபோது, எங்கள் தோட்டத்தை ஒட்டியுள்ள வைகை அணை செல்லும் ரோட்டில் கருப்பு கலர் பல்சர் வாகனம் ஒன்று நின்று கொண்டிருந்தது. பிரேதம் கண்டுபிடிக்கப்பட்ட அன்று போலீசார் என்னை விசாரித்தார்கள். இரு சக்கர வாகனம் எப்போதிருந்து நிற்கிறது என்று கேட்டார்கள், முதல்நாள் இரவிலிருந்து

இருப்பதாக கூறினேன். தற்போது நீதிமன்றத்தில் உள்ள TN–63–BF–4887 பதிவு எண் கொண்ட பல்சர் இருசக்கர வாகனம்தான் சம்பவ இடத்திற்கு அருகே நிறுத்தப்பட்டிருந்ததை நான் பார்த்தேன். இந்த மோட்டார் சைக்கிள் அ.சா.பொ.2. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

பால் ஊற்றுபவர்களும் அந்த ஏரியாவில் பைக்கை நிறுத்தி விட்டு செல்வார்கள். என்னை போலீசார் விசாரித்தபோது நான் பார்த்த வாகனம் என்ன என்று சொல்லவில்லை. இரு சக்கர வாகனத்தின் பதிவு எண் தெரியாது. வாகனம் மட்டும் அடையாளம் தெரியும். தற்போதிருந்து ஆறு மாதத்திற்கு முன்னர்தான் சம்பவ இடத்திற்கு அருகில் ஷெட் போட்டு மாடு வளர்க்கிறார்கள், அதற்கு முன்னர் அங்கு பால்பண்ணை எதுவும் இல்லை. எவ்வளவு நாள் பைக் நிற்கிறது என கேட்டார்கள், அதற்கு நான் இரண்டு நாள்களாக பைக் நிற்கிறது என்று சொன்னேன், அப்போது போலீசார் பைக்கை எடுத்து சென்று விட்டார்கள். நான் பிரேதத்தை பார்க்கவில்லை. பிரேதத்தை கண்டுபிடித்த அன்றுதான் என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தபோது, பைக்கை காட்டி விசாரிக்கவில்லை. நான் சொன்ன நாளில், சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் அசாபொ2 மோட்டார் சைக்கிளை பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்) P.கணேசன்
18.8.23
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

அரசு தரப்பு சாட்சி 8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சின்னச்சாமி | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : /2023 |

<u>(எதிரிகள் முன்னிலையானார்கள்)</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரம்மாணம் செய்யப்பட்டார். 1973 ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

நாள் 18.08.2023.

<u>முதல் விசாரணை</u>

நான் இளந்தோப்பு ஒத்த வீட்டில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 1.1/2 வருடங்களுக்கு முன்பு, மேல்மங்கலம் வைகை அணை ரோட்டில் ஒரு கொலை நடந்ததாக கேள்விப்பட்டேன். இறந்து போனது ஆண் என கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து, குறுக்கு விசாரணை செய்ய கூடுதல் அரசு குற்ற வழக்கறிஞர் அனுமதி கோரினார், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் போலீஸ் விசாரணையில், கடந்த 18.1.21ம் தேதி இரவு9 மணியளவில் நானும், கருப்பசாமியும் வைகை டேம் சென்று விட்டு மீண்டும் வீட்டுக்கு வருவதற்காக வைகை புதுார் மேல்மங்கலம் சாலையில் வந்து கொண்டிருந்தபோது, உமாராணி வகையராவிற்கு சொந்தமான தரிசு நிலத்திற்கு சிறிது தள்ளி ஒரு பைக் நின்றிருந்தது என போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பபாற்ற உண்மைக்கு புறம்பாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்) P.கணேசன்
18.8.23
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

அரசு தரப்பு சாட்சி 9

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜய் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : /2023 |

(எதிரிகள் முன்னிலையானார்கள்)

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரம்மாணம் செய்யப்பட்டார். 1973ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.
நாள் 18.08.2023.

முதல் விசாரணை

நான் இளந்தோப்பு ஒத்தவீட்டில் குடியிருக்கிறேன். மீன் பிடித்தல் மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். முதலாவது பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 1.1/2, 2 ஆண்டுகளுக்கு முன்பு, வைகை புதூர் சாலையில் வைகை டேம் மொக்கையன் என்பவர் இடத்திற்கு எதிர்புறம் சம்பவம் நடந்தது. போலீசார் என்னை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றார்கள், சம்பவ இடத்தில் மார்க் செய்தார்கள், செருப்பு ஒன்றை எடுத்தார்கள். பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து நான் பிரேதம் உள்ள இடத்தில்தான் போட்டேன். நான் கையொப்பம் செய்த பார்வை மகஜர் அ.சா.ஆ 3. செருப்பை கைப்பற்றிய அத்தாட்சி கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த அத்தாட்சி அசாஆ 4. நான் சம்பவம் இடத்தில் பார்த்தபோது அங்கு ஆண் பிணம் எரிந்த நிலையில் கிடந்தது. நான் மேற்படி சாட்சி கையொப்பம் செய்தபோது என் தம்பி

விக்கியும் சாட்சியாக கையொப்பம் செய்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் கையெழுத்து போட்ட அன்று சம்பவ இடத்திலிருந்து போலீசார் பைக்கை கைப்பற்றினார்களா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்பட்ட ஆவணங்களில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்) P.கணேசன்
18.8.23
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

அரசு தரப்பு சாட்சி 10

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சக்திவேல் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : /2023 |

(எதிரிகள் முன்னிலையானார்கள்)

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரம்மாணம் செய்யப்பட்டார். 1973 ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.
நாள் 18.08.2023.

முதல் விசாரணை

நான் நாகையகவுண்டன்பட்டியில் குடியிருக்கிறேன். தற்போது கவுன்சிலராக உள்ளேன். ஆஜர் முதல் மற்றும் இரண்டாவது எதிரிகளை தெரியும். கடந்த 27.1.21 ம் தேதி நானும், எனது நண்பர் மணிகண்டனும் சொந்த வேலையாக எங்கள் ஊரிலிருந்து தேனிக்கு சென்று கொண்டிருந்தபோது, வடுகபட்டி அருகே கோவில் முன்பாக தேவதானப்பட்டி காவல் ஆய்வாளர் எங்களை மறித்தார். ஆய்வாளர் கொலை வழக்கு சம்பந்தமாக எதிரிகளை கைது செய்ய உடனிருக்குமாறு கேட்டார். நானும், மணிகண்டனும் உடனிருந்தோம். காலை 6.15 மணியளவில் ஸ்பிளண்டர் இரு சக்கர வாகனத்தை ஆஜர் இரண்டாம் எதிரி ஓட்ட, முதல் எதிரி பின்னால் அமர்ந்திருந்தார். ஆய்வாளர் அவர்களை நிறுத்தி விசாரித்தபோது, வண்டியை ஓட்டி வந்தவர் பெயர் பிரபாகர் என்றும், பின்னால் அமர்ந்து வந்தவர் விஜயசாந்தி என்றதாகவும், ஆய்வாளர் எதிரிகளிடம் சம்பவம் சம்பந்தமாக விசாரித்தபோது, இரு

எதிரிகளும் வாக்குமூலம் கொடுத்தார்கள். எதிரிகள் கொடுத்த வாக்குமூலத்தை டைப் அடித்து பதிவு செய்து கொண்டார்கள். வாக்குமூலத்தில் சம்பவம் நடந்த இடத்தை காட்டுவதாக எதிரிகள் இருவரும் சொன்னார்கள். (சம்பவ இடம் பற்றி காவல் ஆய்வாளருக்கு ஏற்கனவே 21.1.2021ம் தேதியன்றே தெரிந்து விட்டதால் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இந்த பகுதியை குறியீடு செய்ய கூடாதென எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆட்சேணை தெரிவித்தனர்) பின்னர் ஆய்வாளர் எதிரிகளுடன் எங்களை அழைத்துக் கொண்டு வைகை புதுார் ரோட்டில் ஒத்தவீட்டுக்கு அடுத்து ரோட்டின் இடது பக்கமாக முள் புதருக்குள் கூட்டி சென்றார்கள். அங்கு தரை எரிந்த நிலையில் சாம்பலாக இருந்தது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். அதை ஆய்வாளர் எதிரிகள் அடையாளம் காட்டிய இடத்திலிருந்து தயாரிக்கப்பட்டது. அந்த பார்வை மகஜர் அசாஆ 5. ஆஜர் 1ம் எதிரி ரோட்டிற்கு வலதுபக்கம் சென்று கருப்பு கலர் பல்சர் பைக்கை ஒன்றை அடையாளம் காட்டினார். அந்த பைக்கை காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். நீதிமன்றத்தில் உள்ள பல்சர் கருப்பு கலர் பைக்தான் முதல் எதிரி சம்பவ இடத்திற்கு அருகில் அடையாளம் காட்டினார். வைகை புதுார் ரோட்டில் அமைந்துள்ள கல் குவாரிக்கு அருகில் புதரிலிருந்து ஆஜர் 1ம் எதிரி ஏ.டி.எம். கார்டை எடுத்துக் கொடுத்தார், அது என்னிடம் காட்டப்படுவதுதான். ஏ.டி.எம். கார்டை கசக்கி துாக்கி போட்டதாக முதல் எதிரி சொன்னார். முதல் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 6.கனரா வங்கி Rupay Debit Card சேதமடைந்த நிலையில் உள்ளது. அது அசாபொ.3. மேற்படி ஏ.டி.எம். கார்டை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அது அசா.ஆ 7. பின் 2வது எதிரி தான் டீசல் வாங்கி வந்த வாட்டர் கேன்களை வத்தலக்குண்டு ரோட்டில் கணவாய்பட்டிக்கு முன்னால் பாலத்திற்கு கீழ் மறைத்து வைத்திருப்பதாக கூறினார். 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 8. ஆய்வாளர் எங்களையும், எதிரிகளையும் அழைத்துக் கொண்டு வத்தலக்குண்டு பைப்பாஸ் ரோட்டில் கணவாய்பட்டிக்கு முன்னால் பாலத்திற்கு கீழ் அழைத்து சென்றார், 2ம் எதிரி பாலத்திற்கு அடியிலிருந்து ஒரு கட்டை பையும்,

இரண்டு வாட்டர் கேன்களையும் எடுத்து ஆஜர் செய்தார். என்னிடம் காட்டப்படும் கட்டை பையும், இரண்டு வாட்டர் கேன்களையும் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கட்டை பை அசாபொ4. இரண்டு வாட்டர் கேன்கள் (இரண்டு எண்ணிக்கை) அசாபொ5. கட்டை பையும், வாட்டர் கேன்களை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதான். அந்த அத்தாட்சி அசாஆ 9. நீதிமன்றத்தில் காட்டப்படும் Hero Honda Splender வாகனம்தான் ஆஜர் 2ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது. Hero Honda Splender வாகனம் அசாபொ.6. ஆய்வாளர் ஆஜர் 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட Honour செல்போன் அசாபொ.7. ஆஜர் 2ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட Vivo செல்போன் அசாபொ.8. மேற்படி இரு சக்கர வாகனத்தையும், இரண்டு செல்போன்களையும் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கைப்பற்றுகை அறிக்கை அசாஆ.10. பின்பு போலீசார் நிலையம் சென்று என்னை அழைத்து விசாரித்து அனுப்பி விட்டார்கள்.

<u>முதல் மற்றும் இரண்டாவது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நாகையகவுண்டன்பட்டியிலிருந்து நான் எதிரிகளை பார்த்த இடம் சுமார் 20கிமீ தொலைவு இருக்கும். தேவதானப்பட்டி காவல் நிலையத்திற்கும், என்னுடைய ஊருக்கும் சுமார் 25 கிமீ தொலைவு இருக்கும். தேவதானப்பட்டியிலிருந்து எதிரிகளை பார்த்ததாக சொல்லும் இடத்திற்கும் இடையே சுமார் 10 கிமீ துாரமிருக்கும். என்னை மறித்தபோது, உடனிருந்தவர்கள் அனைவரும் போலீசார்கள். எதிரிகளை பிடித்த இடத்தில் சுமார் 20 நிமிடம் இருந்தோம். எங்களை போலீசார் மறித்ததற்கு பின்னர் போலீசாருடம் கால்மணி நேரம் இருந்தோம், பின்னர் எதிரிகளை பிடித்த பின்னர் 20 நிமிடம் இருந்தோம். 20 நிமிடம் கழித்து பிணம் கிடந்த இடத்திற்கு கூட்டி சென்றார்கள். பிணம் கிடந்த இடம் சுமார் 10கிமீ துாரமிருக்கும். நான் பைக்கில் சென்றேன். போலீசார் ஜீப்பில் சென்றார்கள். நான் எந்த வாகனத்தில் தேனிக்கு சென்றேன் என்று போலீஸ் விசாரிக்கும்போது சொல்லவில்லை. பிணம் கிடந்த இடத்திற்கு காலை 9மணிக்கு சென்றோம். அப்போது இறந்த நபரின் பெற்றோர்கள் பிணம் கிடந்த இடத்திற்கு கூட்டி வரவில்லை. இறந்த நபரின்

பெற்றோரை நான் அன்று பார்க்கவில்லை. எதிரிகளை பிடித்த இடத்தில் ஒப்புதல் வாக்குமூலத்தை டைப் அடித்தார்கள். ஒரு போலீஸ்காரர் டைப் அடித்தார். எதிரிகள் இருவரையும் போலீசார் ஜீப்பில் ஏற்றி கொண்டார்கள். பிணம் கிடந்த ஒரே இடத்திற்கு கூட்டி சென்றார்கள். பிணம் கிடந்த இடத்திற்கு எத்தனை ஆவணங்கள் தயார் செய்தார்கள் என்று ஞாபகமில்லை. நாங்கள் பிணம் கிடந்த இடத்திற்கு அருகில் இரண்டு, மூன்று பேர்கள் மட்டும் இருந்தார்கள். வைகை புதூர், மேல்மங்கலம் ரோடு தென்வடலாக செல்கிறது என்றால் தெரியாது. வைகை புதூர் மேல்மங்கலம் சாலையில் மேற்கு பக்கம் வலது பக்கமிருந்து பைக்கை எடுத்தார்கள். அந்த பைக் அங்கு மூன்று நாட்களாக இருப்பதாக அங்கிருந்தவர்களை விசாரித்தபோது சொன்னார்கள். 27.1.21ம் தேதிக்கு முன்னரே போலீசார் பிணம் கிடந்த இடத்திற்கு வந்ததாக சொல்லவில்லை. பிணம் கிடந்த இடத்திலிருந்து சுமார் 2 கிமீ முன்னாடியே கல்குாரி உள்ளது. மேல்மங்கலம் ஊருக்கு என்னை அழைத்து சென்றார்கள். வடுகபட்டியிலிருந்து 2 கிமீ தொலைவில் கல்குவாரி அருகிலிருந்து கைப்பற்றிய Rupay Debit Card இருந்தது. நாங்கள் போலீஸ் ஜீப்பிற்கு பின்னால் சென்றோம். எதிரிகளை பிடித்த இடத்திலிருந்து பிணம் கிடந்த இடத்திற்கு சின்ன சின்ன கிராமங்கள் வழியாக போலீசார் கூட்டி வந்தார்கள். வடுகபட்டியிலிருந்து மேல்மங்கலம் எவ்வளவு துூரம் என்று தெரியாது. பிணம் கிடந்த இடத்திலிருந்து வத்தலக்குண்டு பைப்பாஸ் ரோடு பாலம் சுமார் 25 கிமீ துூரமிருக்கும். ஒப்புதல் வாக்குமூலத்தை நான் படித்து பார்க்கவில்லை. ஆய்வாளர் உட்பட போலீசார் மொத்ம் பத்து பேர் இருந்தார்கள் என்றால் வாய்ப்பிருக்கலாம். தற்போது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை படித்து பார்த்ததாக சாட்சி கூறுகிறார். ஒப்புதல் வாக்குமூலங்கள் ஒரே நேரத்தில் பதிவு செய்யப்பட்டது. அசா2 பால்ராஜ் எனக்கு உறவினர் அல்ல, யாரென்று தெரியாது. என்னுடைய ஊர் விருவீடு பக்கத்தில் உள்ளது. அன்று போலீசார் என்னை 4.30 மணிக்குமேல் விட்டார்கள். அத்தாட்சியில் கையொப்பம் வாங்கிவிட்டு நான் காவல் நிலையம் சென்ற பின்னர் என்னை அனுப்பி விட்டார்கள். அதன்பின் போலீசார் என்னை கூப்பிடவில்லை. தேனிக்கு காலை என்ன வேலையாக சென்றேன் என போலீஸ் வாக்குமூலத்தில் சொல்லவில்லை. 27.1.21ம்

தேதி காலை நான் சொன்னது போல இரு சக்கர வாகனத்தில் நானும், மணிகண்டன் என்பவரும் முனியாண்டி கோவில் அடிவாரம் அருகே சென்றபோது எங்களை தேவதானப்பட்டி போலீசார் மறித்ததாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில், 1, 2 எதிரிகள் இரு சக்கர வாகனத்தில் அந்த வழியாக வந்தபோது அவர்களை போலீசார் நிறுத்தியதாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. அந்த இடத்தில் 1, 2 எதிரிகளிடம் போலீசார் ஒப்புதலங வாக்குமூலம் வாங்கி பதிவு செய்ததாக சொல்வதும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. அவ்வாறு கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் 1, 2 எதிரிகள் போலீசாரையும், எங்களையும் முதல் விசாரணையில் குறிப்பிட்டதுபோல எந்த இடத்திற்கும் அழைத்து செல்லவில்லை என்றும், அவர்கள் இருவரும் நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டதுபோல எந்த சான்று பொருட்களையும் காண்பிக்கவில்லை என்றும், அதனடிப்படையில் எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் போலீசாரால் உண்மைக்கு புறம்பாக தயாரிக்கப்பட்ட ஆவணங்களில், அவர்கள் கேட்டுக் கொண்டவாறு அவர்களுக்கு அனுசரணையாக கையெழுத்துக்கள் மட்டும் பின்னிட்டு நானும், மணிகண்டனும் கையெழுத்து போட்டோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 1, 2 எதிரிகள் சட்டவிரோதமாக ஏற்கனவே காவல்துறையினரால் பிடித்து வைக்கப்பட்டிருந்தவர்கள் என்றும், அவ்வாறு சட்டவிரோதமாக பிடித்து வைக்கப்பட்ட எதிரிகளை நான் சொன்ன ஆவணங்களில் தொடர்புபடுத்தி, உண்மைக்கு புறம்பாக எழுதி நானும், மணிகண்டனும் கையெழுத்து போட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சான்று பொருட்களை அடையாளம் காண்பித்ததே உண்மைக்கு புறம்பானது என்றும், சட்ட விரோதமானதும் என்று சொன்னால் சரியல்ல. மேலும் இறந்துபோன நபர் என்னுடைய ஊருக்கு அருகே உள்ள விருவீடு கிராமத்தை சேர்ந்தவர் என்பதாலும், அவர் குடும்பம் எனக்கு பங்காளி உறவினர் என்பதாலும் நான் என்னை போலீசார்

பயன்படுத்தி ஆவணங்களை உருவாக்கி, அதன்பேரில் அவர்கள் கேட்டுக் கொண்டவாறு உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

3 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என கூறினார்.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்) P.கணேசன்
18.8.23
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

அரசு தரப்பு சாட்சி 11

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரமேஷ் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : /2023 |

(எதிரிகள் முன்னிலையானார்கள்)

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரம்மாணம் செய்யப்பட்டார். 1973ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 18.08.2023.

முதல் விசாரணை

நான் பட்டிவீரன்பட்டியில் குடியிருக்கிறேன். பட்டிவீரன்பட்டியிலுள்ள கருப்பையை பெட்ரோல் பங்கில் சேல்ஸ்மேனாக வேலை செய்கிறேன். ஆஜர் 2ம் எதிரியை மட்டும் தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு மாலை 4.30, 5 மணியளவில் ஆஜர் 2ம் எதிரி பங்கிற்கு வந்து ஆயிரம் ரூபாய்க்கு டீசல் கேட்டார். கேன்கள் 800ரூபாய்க்குதான் டீசல் பிடிக்கும் என கூறி ரூ.800/–க்கு டீசல் போட்டேன். பின் 7, 8 நாட்களுக்கு பிறகு, தேவதானப்பட்டி காவல் ஆய்வாளர் ஆஜர் 2ம் எதிரியின் போட்டோவை காட்டி இவர் இங்கு டீசல் எதுவும் வாங்கினாரா என விசாரித்தார். நான் அவருக்கு டீசல் விற்ற விவரத்தை கூறினேன். என்னிடம் காட்டப்படும் இரண்டு கேன்களில்தான் ஆஜர் 2ம் எதிரி டீசல் வாங்கி சென்றார். ஆஜர் 2ம் எதிரி என்னிடம் Hero Honda இரு சக்கர வாகனத்தில் டீசல் வாங்க வந்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>முதல் மற்றும் இரண்டாம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பணிபுரிந்த பெட்ரோல் பங்கின் உரிமையாளர் சீனிவாசதேவய்யா. எங்கள் பெட்ரோல் பங்க் திண்டுக்கல் லேபர் இன்ஸ்பெக்டர் வரம்பு எல்லைக்கு உட்பட்டது. எங்கள் பெட்ரோல் பங்கில் ஆறு பேர்கள் வேலை செய்வதற்கு ஆவணம் பராமரிக்கப்படுகிறது. இந்த ஆவணங்களை லேபர் இன்ஸ்பெக்டர் ஆய்வு செய்யும்போது அவரிடம் காட்ட வேண்டும். இந்த ஆவணத்தை போலீசார் பார்க்கவில்லை. டீசலை கேனிலும், வண்டியிலும் வாங்குவார்கள், கேனில் வாங்குவது ரேராக இருக்கும். போலீசார் ஒரு போட்டோவை மட்டும் காட்டினார்கள். ஒரு நாளைக்கு 600 லிட்டர் டீசல் போகும். யார் எந்த தேதியில் டீசல் வாங்கி சென்றார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. போட்டோவை காட்டியதை தவிர, போட்டோவில் இருந்த நபரை நேரில் அடையாளம் காட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. டீசல் போட்டதற்கு பின்னர் இன்றுதான் நீதிமன்றத்தில் டீசல் போட்ட நபரை அடையாளம் காட்டுகிறேன். டீசல் போட்ட நபரின் வண்டி பதிவு எண்ணை போலீஸ் விசாரித்தபோது சொல்லவில்லை. டீசல் போட்டால், கேட்டால் மட்டும் ரசீது கொடுப்போம். டீசல் வாங்கி சென்ற தேதி மற்றும் நேரத்தை சொல்லிதான் என்னிடம் போலீசார் கேட்டனர். அந்த தேதி மற்றும் நேரத்திற்கு முன்னால், பின்னால் டீசல் வாங்கியவர்கள் பற்றி போலீசார் கேட்கவில்லை. போட்டோவின் பின்புறம் போட்டோவில் உள்ள நபரை அடையாளம் காட்டியதாக நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. டீசல் போட்ட நபரை நேரில் கூட்டி வந்தால் அடையாளம் காட்டுவேன் என போலீசாரிடம் சொன்னேன். ஒரு நபர் ரூ1000/—க்கு டீசல் கேட்டார் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எத்தனை லிட்டர் டீசல் விற்பனையானது என்பதற்கு எங்களிடம் ஆவணம் உள்ளது. எங்கள் பெட்ரோல் பங்கில் டிஜிட்டல் மீட்டர் உள்ளதால், ஒவ்வொருவருக்கும் எவ்வளவு லிட்டர் விற்பனை செய்த விவரம் பதிவு இருக்கும். 18.1.21ம் தேதியன்று போலீசார் பெட்ரோல் பங்கில் உள்ள டிஜிட்டல் மீட்டரை பார்வையிட்டு, குறித்துக் கொண்டார்கள். வழக்கு சம்பந்தமாக எனது பெட்ரோல் பங்கின் உரிமையாளரை விசாரித்தார்களா என்று தெரியவில்லை. நான் முதல்

விசாரணையில் சொல்லியதுபோல எந்த நபரும், எந்த காலத்திலும் டீசல் எதுவும் கேன்களில் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் போலீசார் எந்த புகைப்படத்தை காட்டியும் கேட்கவில்லை என்றும், அந்த புகைப்படத்தை காட்டி விசாரித்தபோது, நான் அந்த நபரை அடையாளம் காட்டினேன் என்பது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. 2வது எதிரியை தற்போது போலீசார் சொல்லிக் கொடுத்ததின்பேரில் டீசல் வாங்கிய நபரை அடையாளம் காட்டுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் போலீசார் கேட்டுக் கொண்டபடி அவர்கள் என்னை உண்மைக்கு புறம்பாக சாட்சியாக உருவாக்கி, நடக்காத சம்பவத்தை சொல்லச் சொல்லியதின்பேரில், அவர்களுக்கு ஒரு சாட்சி வேண்டுமென்பதற்காக நான் பயன்படுத்தப்பட்டு சாட்சியளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் புரன் விசாரணையின்போது காண்பிக்கப்பட்டதாக சொல்லப்படும் போட்டோ தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. போலீசார் சொல்லிக் கொடுத்ததின்பேரில் கேன்களை தற்போது உண்மைக்கு புறம்பாக அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல. அசாபொ5 பொதுவாக எல்லா கடைகளிலும் கிடைக்கக்கூடிய பொருள்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோது, கேன்களை காட்டி விசாரிக்கவில்லை.

3 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

3 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என கூறினார்.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை,
அப்படியே ,என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி
உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு,
சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு
செய்யப்பட்ட விவரத்தை ஒப்புக் கொண்டு,
என் முன்னிலையில் கையொப்பமிட்டார்
என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்) P.கணேசன்
18.8.23
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.